Registered as a Newspaper

A/L 88,89
Weekend Classes
நடைபெறுகின்றன.
New Master
Institute
241, Navalar Road,
JAFFNA.
B.M.CLANE, JAFFNA.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-50

A/L 88
Paper Classes
(Sat. / Sun)
9.30 — BOTANY
10.30 — ZOOLOGY
11.30 — CHEMISTRY
12.30 — PHYSICS
(எமது வழமையான ஆசிரியர் குழு)
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு மாசி மீ 19 புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஐ ஆதிர் பிறை 12 (02 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 17

மாகாண சபைத் தேர்தல் வடக்கு, கிழக்கில் இல்லை!

மொத்தம் ஐந்து மாகாணங்களில் ஒத்திவைப்பு என அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்போதைக்கு மாகாணசபைத் தேர்தல் நடக்கமாட்டாது.

வடக்கு, கிழக்கு உட்பட மொத்தம் ஐந்து மாகாணங்களில் மாகாணசபைத் தேர்தல் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி. சில்வா அறிவித்தார்.

ஐந்து மாகாணங்களுக்கான தேர்தலை ஒத்தி வைக்க ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா தீர்மானித்திருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி முதலில் செய்தி ஒலிபரப்பி இருந்தது.

அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில், ஐந்து மாகாணங்களிலும் தேர்தலை ஒத்திப் போடுவது குறித்து தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பு வந்தது.

மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று மார்ச் இரண்டாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை ஏற்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் ஏப்ரல் நடுப் பகுதியில் தேர்தல் நடக்கும்.

வடக்கு, கிழக்கில் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலையை மே மாதம் நடுப்பகுதிலேயே உருவாக்க முடியும் என இந்தியா இலங்கையிடம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதனால் ஏப்ரலில் தேர்தலை நடத்துவதுஉகந்தது அல்ல என்று இந்தியத் தூதுவர் திரு ஜே. என். டீக்ஷித், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் தேர்தலைச் சுதந்திரமாக நடத்தக்கூடிய சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை என்றும், அதனால் தேர்தலில் பங்கு பற்றுவது இல்லை என்றும்—

தேர்தலை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசிடம் கேட்டுக்கொள்வது என்றும்—

தமிழர் அமைப்புகள் கடந்த புதன்கிழமை சென்னையில் கூடி முடிவு செய்திருந்தன.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே வடக்கு, கிழக்கு உட்பட 5 மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல் காலவரையின்றி ஒத்திப் போடப் பட்டுள்ளது.

நேற்றையஅறிவிப்பின்படி, நான்கு மாகாண சபைகளின் தேர்தல்கள் மட்டுமே நடத்தப்படும்.

ஊவா, சப்ரகமுவா, வடமேற்கு,வடமத்திய மாகாணங்களில் மட்டுமே மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படமாட்டா.

காலவரையின்றி இத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இந்த நடவடிக்கையை எடுத்து இருப்பதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா நேற்று அறிவித்தார். (அ-எ)

எட்டு வயதினில் தமிழ் மாணவன் லண்டனில் சாதனை!

லண்டன், மார்ச் 1

எட்டு வயதேயான இலங்கைத் தமிழ் மாணவன் கணேஷ்நேற்றம்பலம் லண்டன் கேம்பிரிட்ஜ் சபைப் பரீட்சையில் முதலாந் தரத்தில் சித்தி எய்தி சாதனை நிகழ்த்தியுள்ளான்.

இதனை லண்டன் டைம்ஸ் வெளியிட்டிருக்கின்றது

இப் பரீட்சையை 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் எடுப்பது நடைமுறை.

கணேஷ் தனிப்பட்டபரீட்சார்த்தியாக இப்பரீட்சையை எடுத்தான்.

பிரிட்டிஷ் மாணவியான றுத் லோறன்ஸ் என்பவர் இதே சோதனையை 9ஆவது வயதில் எடுத்துப் புரிந்த சாதனையை கணேஷ் முறியடித்து விட்டான்என்று லண்டன் டைம்ஸ்செய்தி தெரிவித்தது.

செல்வி லோறன்ஸ், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க நான்கு வருடங்கள் காத்திருக்கவேண்டியிருந்தது. (அ-எ)

பிக்குவுக்கு மனநோய் சிகிச்சை

கொழும்பு, மார்ச் 2

விஜே குமாரணதுங்காவின் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பௌத்த பிக்கு மனநோய் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

முன்னுக்கு நான் யோசிச்சனான்! வடக்கு, கிழக்கிலும் தேர்தல் நடக்கு மண்டு உவர் உத்தமர் ஒரு பீரிலர் விட்டுப்பாக்கிறார் எண்டு அது சரியாய்ப் போச்சுது..... பாத்தியளே!

யாழ் மட்டுநகர் பஸ் சேவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ் – மட்டக்களப்பு பஸ் சேவை மீண்டும் யாழ் பஸ் நிலையத்தில் இருந்து நாளை முதல் ஆரம்பமாகிறது

கடந்த வருடம் இச் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும்மட்டக்களப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடன் உடன் பேசுங்கள்!

இந்திய அரசிடம் வற்புறுத்து

புதுடில்லி மார்ச் 2

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மத்திய அரசு உடனடியாகப் பேச்சுக்களைத் தொடங்க வேண்டும்.

இப்படி எதிர்த் தரப்பு எம். பிக்கள் நேற்று லோகசபையில் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அமைதிப்படையினர் இலங்கையில் தமது ஆரம்ப நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் எதிர்த் தரப்பினர் கேட்டுக் கொண்டனர். (ஒ-எ)

அமைதிப்படை பணி குறித்து லோகசபையில் பலவித கருத்துக்கள்

புதுடில்லி, மார்ச் 2

இந்திய அமைதிப் படையினரின் பணிகள் பற்றி நேற்று புதுடில்லி லோகசபையில் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையொப்பமிட்டதை அரசு எம். பிக்கள் பாராட்டினர்.

இந்தியஅமைதிப்படைக்குப் பதில் சர்வதேசப் படை ஒன்று இலங்கையில் நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்த்தரப்பு எம் பிக்கள் வலியுறுத்தினர்.

மாகாணசபைத் தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். (ஒ-எ)

இந்தியாவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்குப் புலிகள் தயார்

சென்னையில் அறிக்கை

சென்னை, மார்ச் 2

இந்தியஅரசுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருக்கின்றோம் சென்னையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் விடுத்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் முன்கண்ட தகவல் வெளியாவது.

நிபந்தனையற்ற முறையில் இந்திய அரசுடன் பேச்சுக்களை நடத்த நாம் என்றும் தயாராக உள்ளோம் — இப்படி புலிகள் இயக்கத்தின் அறிக்கைதெரிவித்ததாக யு என் ஐ செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது.

இந்த அறிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்னையில் விடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ-ஒ-எ)

யு என். ஐ. செய்தி ஸ்தாபனம் இந்த அறிக்கையை வெளியிட்டது

அன்னையர் முன்னணியின் வேண்டுகோளை நாம் ஏற்றுள்ளோம்.

இலங்கைத் தமிழரின் பாதுகாப்பைச் சரியாக உறுதிப்படுத்தாமல் ஆயுதங்களை ஒப்படைப்பது சரித்திரத்துரோகமாகும்

பாதிக்கப்பட்டவர்களுக்கு தொலைக்காட்சி வானொலி லைசென்ஸ் சலுகை கிடைக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச்2

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு லைசென்ஸ் எடுப்பதற்கு அசம்பாவிதங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சலுகை வழங்கப் படவுள்ளது.

அசம்பாவிதங்கள் காரணமாக வீடுகளை இழந்தோ அல்லது உடைமைகள் எரியுண்டோ பாதிக்கப்பட்டவர்கள் தமது பாதிப்புக்கு குறித்து தபால் அதிபர்களுக்கு அறிவித்தால் அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு புதிய லைசென்ஸுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அசம்பாவிதங்களின் போது ஏராளமான வானொலி, தொலைக்காட்சி பெட்டிகள் திருட்டுப் போயிருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் தமதுநிலைமையை சரியான முறையில் தெளிவுபடுத்தினால் சலுகை அளிக்கப்படுமெனவும் மோசடிக்காரர்கள் இச் சலுகையை பயன்படுத்தாமல் தீவிரமாகக் கண்காணிக்கப்படுமெனவும் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-68)

இறந்தோர் ஆறாக உயர்வு

கொழும்பு, மார்ச் 2

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், பச்சனூர்க் கிராமத்தில் அண்மையில் இடம் பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

16 வீரர்கள் காயமடைந்தனர். [இ-எ]

யாழ்நகரில் சென்றிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். நகரின் முக்கிய சந்திகளில் இந்திய அமைதிப்படையினர் புதிய சென்றிகளை அமைத்துள்ளனர்.

யாழ்–ஆஸ்பத்திரியில் உள்ள சில அத்தியாவசிய பிரிவுகளிலும் அமைதிப் படையினர் காவல் புரிந்து வருகின்றனர். (ஒ-10)

இலங்கை தற்கொலையில் முதலிடம்

கொழும்பு, மார்ச் 2

ஆசிய நாடுகளிடையே இலங்கையில் தான் அதிக அளவில் தற்கொலைகள் இடம் பெறுகின்றன.

பெரும்பாலான தற்கொலைகள் அற்பகாரணங்களுக்காகவே இடம் பெறுகின்றன என்று ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகின்றது (ஒ-எ)

மட்டக்களப்பு அன்னையர் மீண்டும் உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 2

மட்டக்களப்பில் மீண்டும் இரண்டு பெண்கள் தங்களின் சாகும் வரை உண்ணாவிரதத்தை நேற்று ஆரம்பித்தனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்த இரண்டு பெண்களும் தங்களின் சாகும் வரை உண்ணாவிரதத்தைக் கடந்த திங்கள் பிற்பகல் கைவிட்டிருந்தனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அன்னையர்களான (அன்னம்மா டேவிட் 58 வயது), திருமதி நேசம்மா வடிவேல் (50 வயது) ஆகியோரும் பத்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்தனர்.

இந்திய அரசும், விடுதலைப் புலிகளும் அன்னையர் முன்னணியுடன் பேசமுன் வந்ததைத் தொடர்ந்து திங்கட்கிழமை இருவரும் உண்ணாவிரதத்தைக் இடைநிறுத்தம் செய்ததாகவும் —

அதில் திருமதி ஜனாதிபதி அவர்கள் நேற்று மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணிக்கு நீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மாலையில் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. (மற்றுமொரு செய்தி 4ஆம் பக்கத்தில்) (அ.எ)

இந்தியசெய்தி

மேலும் இருவர் உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 2

பத்து நாட்கள் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த அன்னையருடன் மேலும் இரண்டு பெண்கள் நேற்று சேர்ந்து கொண்டனர் என ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

தற்பொழுது சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் பெண்களின் எண்ணிக்கை நான்காகஉயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது (ஒ-எ)

சுபநேரம்

02- 03- 1988
மாசி 19
புதன்கிழமை
சுபநேரம்: 4.57 முதல் 6.27 வரை
ராகுகாலம்: 12.27முதல் 1.57 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
மாசி மகம்

யாழ். செயலகம் மீண்டும் இயங்கா நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ் அரச செயலகம் மீண்டும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது

அரச செயலகமநேற்று இயங்கவில்லை அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கடமைக்குச் செல்லவில்லை.

மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி இம்மாதம் 9ஆம் திகதி முடியும் வரை யாழ் செயலகம் இயங்கக் கூடாது எனத் தடுக்கப்பட்டதாலேயே நேற்று அதுஇயங்கவில்லை

இந்தியப் பொலீஸார் தொடர்ந்து அங்கு பாதுகாப்புக் கடமைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதேவேளை நேற்று வாசனங்களுக்கான 'பாஸ்' களும் வழங்கப் படவில்லை. (ஒ-10)

இரவில் மீன்பிடிக்க அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடக்கு, கிழக்குக் கடற் பிரதேசங்களில் தடை செய்யப்பட்டிருந்த இரவுநேர மீன்பிடி யாழ் குடாநாட்டுக் கடற் பிரதேசத்தில் மட்டும் நீக்கப்பட்டுள்ளதாக இந்திய அமைதிப் படை ராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் பாதுகாப்பை முன்னிட்டு மீனவர்கள் சில ஒழுங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

மக்கள்வங்கியின் தலைவருக்குச் சூடு!

கொழும்பு, மார்ச் 2

மக்கள் வங்கித்தலைவர் டாக்டர் எஸ் ஜி. ஜி. பொன்னம்டோ நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரின் வீட்டில் இருந்து அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போது சுட்டுக்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

கல்வி

அறிவொளி கல்விக் கழகம் 150, கோவில் வீதி, நல்லூர். ஆண்டு 6 இற்கான கணிதம் விஞ்ஞானம் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

க.பொ.த. (உ.த) தூயகணிதம், பிரயோக கணிதம் ஆரம்பமாகின்றது, கிழமை நாட்கள், ஞாயிறு காலை, மாலை வகுப்புகள் 1988, 1989 பரீட்சைப் பிரிவுகளுக்கான அட்சர கணிதம், நிலையியல் ஆரம்பமாகின்றது. பிரபல கல்லூரி ஆசிரியரும் பேராசனைப் பல்கலைக்கழக முன்னாள் கணித விரிவுரையாளரும் போதனை செய்வார். இடம்: Shamrock Academy. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (1776)

கம்பியூட்டர் கல்வி

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆரம்பம்: 7 – 03 – 88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உபதபாற் கந்தோர் அருகாமை)

விற்பனைக்கு

எம்மிடம் தாக்கலாத்திற்கான சிலுவைப் பாதைப் புத்தகங்கள், திருமணித்தியாலம், பசாம் புத்தகம், பசாம் ஒலிப்பதிவு நாடாக்களும், சிலுவைப் பாதை ஒலிப்பதிவு நாடாக்களும் விற்பனைக்கு உண்டு. கிடைக்குமிடம்: 'புனித தெத்தாத்திரை மாதா'' செபமாலை ஸ்ரோர்ஸ், 140, சுருவில் வீதி, கரம்பொன். ஊர்காவற்றுறை (16 4)

விற்பனைக்கு

Sisil R-80 இலக்க முடைய நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்: A. Kasenayagam, 26/10, St. Benedict's Road Nallur, Jaffna

TYPE WRITERS

தட்டச்சு இயந்திரங்கள், ஆங்கிலம் புதிய Brother Portable மற்றும் standard தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (1785)

புத்தகம்

சுலபமாக ஆங்கிலம் பேசுவதற்கு Spoken English 40/- தமிழ் மூலம் சிங்களம் படிக்க நல்லதோர் புத்தகம் 20/- மலிவு விலையில் எண் ஜோதிடம், ''வாழ்க்கைக்கு நலம் தரும் நியூ மாலஜி 6/50. பூரண சிங்கப் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1603)

சேவை

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலமாகக் சமுவிப் பிரிண்டிங் செய்வதற்கும், மீண்டும் 24 மணித்தியால சேவை செய்வதற்கும் தொடர்பு கொள்ளவும்: குயிக் ஸ்ரார், 163, நவலர் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே எமது சேவை. எல்லா அளவுகளிலான நேர்த்தியான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும் சகல வகையான ரேனியோ வேலைகளுக்கும் உங்களுக்குத் தேவையான தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும் என்றும் எப்பொழுதும் கிளின, 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பஸ்

சீசன் டிக்கெட்

அடுத்த மாதம்

வழங்கப்படக் கூடும்

யாழ்ப்பாணம் மார்ச்2

வடபகுதிக்கான மாணவர் உத்தியோகத்தர்கள் சீசன் டிக்கெட் (மாதாந்த பருவச்சீட்டு) இம் மாதமும் வழங்கப் படமாட்டாது. அடுத்த மாதத்திலிருந்தே வழங்கப்படும்.

இவ்வாறு யாழ் பிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அண்மையில் நடந்த சம்பவங்களில் கோண்டாவில் டிப்போ களஞ்சிய அறையும் பாதிக்கப்பட்டது.

இதனால் அங்கிருந்த சீசன் டிக்கட்டுக்கள் பல சேதம் அடைந்தன. ஏராளமானவை களவாடப்பட்டும் உள்ளன,

இதன் காரணமாக தொடர்ந்து அதே சீசன் டிக்கட்டுக்களை நாம் வழங்கினால் களவாடப்பட்ட சீசன் டிக்கட்டுக்களும் பாவனைக்கு உட்படுத்தப்படும்.

எனவே நாம் இனி மேல் புதிய வடிவிலான சீசன் டிக்கட்டுக்களை விநியோகிப்பதன் மூலம் இப் போலிச் சீசன் டிக்கெட்டுக்களின் பாவனையைத் தடுக்க முடியும்.

இதற்கான புதிய வடிவிலான சீசன் டிக்கெட் கொழும்பில் அச்சிடப்பட்டு வந்ததும் அடுத்த மாதமளவில் இருந்து இவை விநியோகிக்கப் படும்.

இப்படி இந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ—)

பேடன்பவல் தினவிழா

வட்டுக்கோட்டை, மார்ச் 2

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்களைச் சங்கமும் யாழ் மாவட்ட சாரணர் சங்கமும் இணைந்து நடத்தும் 'பேடன்பவல் தினவிழா' யாழ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நாளை 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி அளவில் மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் தலைமையில் நடைபெறும்.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். (இ-161)

நகைகொள்ளை

இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பட்டப் பகலில் நகைகள் கொள்ளையிடப் பட்டுள்ளன.

வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பாக இந்திய அமைதி காக்கும் படையினரிடம் முறையிடப் பட்டுள்ளது. (இ)

புதிய சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் விவசாய டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது. (ஒ-9)

வடக்கு - கிழக்கில்

அமைதியைதோற்றுவிக்க

ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்குக!

பிரசைகள் குழு கோரிக்கை

காங்கேசன்துறைமார்ச்2

வடக்குக் கிழக்கில் இன்னும் சரியான அமைதி ஏற்படவில்லை. தொடர்ந்தும் அமைதியற்ற சூழ்நிலையில் மக்கள் கஷ்டமுறுகிறார்கள். ஆகவே உடனடியாக அமைதியைத் தோற்றுவிக்க ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை சகல தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை வலி, வடக்கு பிரசைகள் குழு ஒன்றியம் நிறைவேற்றியுள்ளது.

ஒன்றியத்தின் கூட்டம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தடைப்பட்டுள்ள ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சையை மேலும் காலதாமதமின்றி நடத்த வேண்டும் என்றும் வயாவிளான் மகாவித்தியாலய மாணவர்களின் நலன் கருதி தற்காலிக கட்டடங்களை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்கல் வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (இ | 68)

சென். ஜோன்ஸ்

அம்புலன்ஸ் தொடர்பு கொள்ளக் கோருகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடந்த வருட அசம்பாவிதங்களின் போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து குடும்ப அங்கத்தவர்களை இழந்தவர்களும், அங்கு வினமுற்றவர்களும் மரண அத்தாட்சிப் பத்திரம் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றோடு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

அத்தாட்சிப் பத்திரங்களின் போட்டோ பிரதி ஒன்றுடன் 179 பிறவுண் வீதியில் உள்ள சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண தலைமைக் காரியாலயத்தில் நாளை மார்ச் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதேபோல் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களின் குடும்பத்தவர்கள் யாராவது மரணமுற்றிருந்தால் அல்லது அங்வினமுற்றிருந்தால் அவர்களும் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமூகம் அளிக்குமாறு வடமாகாண நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. எஸ். செல்வரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-10)

எல்லா விதமான மணிக்கூடு வகைகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

விக்ரர் அன் சன்ஸ்

★ சிறந்த பாடல்களை ஸ்ரீரியோ முறையில் ஒலிப்பதிவு செய்ய

★ மின்சார உபகரணங்களைத் திருத்திக் கொள்ள

★ பழைய, புதிய வீடியோப் படங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள

தொடர்புகொள்ள வேண்டிய ஸ்தாபனம்

விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

1. KUWAIT:

1. CLEANERS — 100
2. WAITERS — 30 (மூன்று வருட அனுபவச் சான்றிதழ்)
8. HOUSE DRIVER — சாப்பாடும் தங்குமிடவசதியும் இலவசம்

2. SAUDI AIRPORT CLEANERS:-

1. CLEANERS வயது 21 — 44 வரை
2. DRIVERS Open Visa 30 — வயது 25 — 47 — சாப்பாடும் தங்குமிட வசதியும் இலவசம்

3. SAUDI ARABIA:

(1) CLEANERS
(2) OFFICE BOY — 1
(3) DRIVERS
(4) LABOURERS
(5) AG LABOURERS — (கமத்தொழில் அனுபவம்)
(6) MASON
(7) CARPENTERS
(8) PLUMBERS — வயது 21 — 49
(9) ELECTRICIANS — சாப்பாடும் –
(10) SECURITY — தங்குமிடவசதியும் இலவசம்
(11) MECHANICS

மு. கு: மேற்கண்ட தொழில் வாய்ப்பின் விபரமறிய எமது ஸ்தாபனத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

★ T. V. TRAVELS ★

Brown Road, Kokuvil.

DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சி நெறி

15 - 03 - 1988 இல்

புதிய வகுப்புகள் ஆரம்பம்

1. Nurses-Aid Association of Sri Lanka வினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.
2. எமது நிறுவனத்தில் தாதிப் பயிற்சியை முடித்துக் கொள்ளும் மாணவிகளுக்கு சிங்கப்பூர் வைத்தியசாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
3. தூர இட மாணவிகளுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள் உண்டு.

விவரங்களுக்கு:

சாயி மெடிக்கல் அக்கடமி

இல.10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர். 7(11)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்வேலுப்பிள்ளை கந்தையா (கந்தமுத்து)
(ஆளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)
வட்டுக்கோட்டை

மலர்வு:- 25-05-1925 உதிர்வு:- 23-02-1986
திதி:- 02-03-1988

நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், சகோதரர்கள்.

திருமதி பாக்கியலட்சுமி கந்தையா
யோக வாசம்
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. (1784)

யானைக்கால் நோயிலிருந்தும் 13 வருட அஸ்மாவிலிருந்தும் இயேசு சுவாமியின் திருவருளால் சுகமாக்கப் பட்டார்.

சயரோகத்தினால் சுகமாக்கப்பட்டார்.

மஞ்சள் காமாலை 4 வருஷம், ஹைட்ரஸ் ஏனியா 5 வருஷம் இந்நோயிலிருந்து சுகமாக்கப்பட்டார்.

இயேசு ஜீவிக்கிறார்

தேவ பணி பயிற்சி முகாம்

த.பெ இல: 1044, கொழும்பு.

அரசியல் ஆண்டதா? ஆண்டவனும் வெளிப்பட்டானா? அல்லலும் அலறலும் ஓய்ந்ததா? ஆ! இந்தத் தெய்வம் எங்கே? தெய்வமே நீ இருந்தால் ஏன் இப்படி நடக்கிறது? இதற்கு விடை காண இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்!

கண்ணீர்க் கடலில் நீந்திக் கொண்டிருக்கும் யாழ், மட்டுநகர், மன்னார் மா மக்களே! தெய்வம் எங்கே என்று சித்தித்தீர்களா? உங்கள் கண்ணீரைத் துடைக்கும் தெய்வத்தின் பாதத்தல் இதோ சில நாட்கள் இறை ஆராதனை!

இடம்: சுகததாச உள்ளரங்கம்

காலம்: மார்ச் **6** முதல் **13** வரை.

மாலை 5-30 மணி

செய்தி: சகோ. S. இராஜேந்திரம்

திரண்டு வாருங்கள்!
தெய்விக அருள் பெற்றுச் செல்லலாம்!

குறிப்பு: (தங்குமிடவசதி வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளுங்கள்)

இயேசு ஜீவிக்கிறார்,
த.பெ.இல: 1044, கொழும்பு.

(1748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

எவ்வளவுதான் உயர்ந்ததேயானாலும் பிறருடைய கடமைக்காகத் தன்னுடைய கடமையைக் கைவிடலாகாது.

— புத்தபிரான்

உதயன்

இன்மை - அருந்சாமை - தடு தீமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
02.3.1988 த.பெ.இல:-23

தடுங்கள், தவிருங்கள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாந்திபேதி நோய் வெகுவேகமாகப் பரவி வருகிறது. இது குறித்து மக்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும் என சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நடைபெற்ற விசேட மாநாடு ஒன்றில் குடாநாட்டில் வாந்திபேதி வேகமாகப் பரவி வருவது குறித்தும், அதனைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்தும் நீண்ட நேரம் ஆராயப்பட்டிருக்கிறது.

வாந்திபேதி நோய் உயிராபத்தை விளைவிக்கக் கூடிய கொடிய நோயாகும். தண்ணீர், உணவு, மலசல கூடம் ஆகியனவே இந்த நோய் பரவுவதற்குப் பிரதான காரணிகளாகும். ஆகையால் அவை சம்பந்தமாக மிகக் கவனமாகவும், சுகாதாரத்தைப் பேணியும் நடந்து கொண்டால் நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

நோய்களைப் பொறுத்தவரையில் அவை மனிதனைப் பீடித்துக் கொள்வதற்கு முன் தடுப்பதே நல்லது. நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பதில் அது வராது தடுத்துக் கொள்வதே சிறந்தது என்பது ஒரு ஆங்கில வாக்கு.

அது, வாந்திபேதி போன்ற தொற்று நோய்களுக்கு முழுக்க முழுக்கப் பொருத்தமானதாகும். நோய் வராது தடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கலாம். ஆனால் பொதுமக்கள் அவற்றில் அக்கறை காட்டி வேண்டிய தடுப்பு முறைகளையும் சரிவரக் கையாளுதல் அவசியம். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல், எந்தச் சிறந்த மருந்து இருந்தாலும் நோய் பரவுவதைத் தடுப்பது என்பது கஷ்டமாகி விடும்.

எனவே, வாந்தி பேதிநோயினால் ஏற்படக் கூடிய கொடிய விளைவுகளைச் சிந்தித்தாவது, பொதுமக்கள் இதுவிடயத்தில் மிகவும் முன்னெச்சரிக்கையுடனும், கவனமாகவும் நடந்து கொள்ளுதல் மிக அவசியம்.

தனிப்பட்ட சுகாதாரத்தைப் பேணுவதிலும், தடுப்பு முறைகளைக் கைக்கொள்வதிலும் மக்கள் அசிரத்தையாக இருப்பின், குடாநாட்டில் வேண்டாத மரணங்களுக்கு வகை செய்ததாகவே முடியும்.

ஏற்கனவே ஆண்டுக்கு ஆண்டு, மாதத்துக்கு மாதம், நாளுக்குநாள் எமது மண்ணில் வேண்டாத மரணங்கள் சம்பவித்தன. அவற்றுக்கு மேலதிகமாகத் தொற்றுநோய்கள் மூலமும் மரணங்கள் சம்பவிக்க இடங் கொடுக்கலாமா?

நாம் படித்த சமூகத்தினர் எனப் பெருமையாகச் சொல்லிக்கொள்வதால் ஆகப் போவது ஒன்றுமில்லை. அந்தப் படிப்பும் அறிவும் தொற்றுநோய்கள் பரவாது தடுக்க உதவவில்லை எனில் அதனால் என்ன பலன்?

ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் வாந்திபேதி நோயின் ஆபத்தை உணர்ந்து, அது பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கைக்கொள்ளுவதைக் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நோய் குழந்தைகளுக்கு இலகுவில் தொற்றக் கூடியது. ஆகையால் அதனைத் தடுப்பதிலும் ஒவ்வொரு பெற்றோரும், உற்றாரும் கவனமாக இருக்க வேண்டும்.

நோய்க்கான ஆரம்ப அறிகுறிகள் கண்டவுடனேயே சிகிச்சைக்குச் செல்ல வேண்டும். நோய் முற்றி உயிராபத்து ஏற்படும் வரை தாமதிக்கலாகாது.

மொத்தத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பும், அதிகாரிகள் அக்கறையும் இருந்தால் வாந்திபேதி நோய் பரவும் ஆபத்தைத் தவிர்க்கலாம் — தடுக்கலாம்.

நிற வேற்றுமை

சேப்டவுன், மார்ச்1

தென் ஆபிரிக்க அரசு, கறுப்பு இன ஸ்தாபனங்கள் மீது மேலும் பல கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

ஏற்கனவே பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. இதனை எதிர்த்து கறுப்பு இன அமைப்புக்கள் கிளர்ச்சிகளை நடத்தி வருகின்றன. (எ)

பனுமா நெருக்கடி அமெரிக்காதலையிடாது

வாஷிங்டன், மார்ச்1

பனுமா நெருக்கடியில் அமெரிக்கா இராணுவ ரீதியில் தலையிடாது

இப்படி வெள்ளை மாளிகை அறிவித்தது.

சிவிலியன் ஆட்சிக்கே அமெரிக்கா ஆதரவளிக்கும். நெருக்கடியை பனுமா மக்களே தீர்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு— வெள்ளை மாளிகையின் அறிக்கையில் இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

பனுமா நெருக்கடி காரணமாக அதிபர் றேகன் வார இறுதியில் ஓய்வு பெற கூம்ப் டேவிட் செல்லவிருந்த திட்டத்தை ரத்துச் செய்து விட்டார். (எ)

வளைகுடா யுத்தம்

ஏவுகணைத் தாக்குதலில் ஈரான் - ஈராக் தீவிரம்

பக்தாத், மார்ச் 1

ஈராக் ஈரான் நாடுகளுக்கு இடையேயான ஏவுகணைத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன.

பதிலுக்குப் பதில் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துவதில் இரண்டு நாடுகளும் கண்மூடித்தனமாக ஈடுபட்டுள்ளன.

ஈரானின் சண்டை விமானங்கள் ஈராக்மீது நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஈரானின் படைவிமானங்கள் ஈராக் எல்லைப்புறத்தைத் தாக்கின.

அதைத் தொடர்ந்து ஈரான் ஏவுகணைத் தாக்குதலை ஆரம்பித்தது. மூன்று ஏவுகணைகளைக் கடந்த ஞாயிறு இரவு பக்தாத் நகரிலுள்ள ஒலி பரப்பு, ஒளிபரப்பு நிலையங்களை நோக்கி ஏவியதாக ஈரான் அறிவித்தது.

இந்த ஏவுகணைகள் மக்கள் நெருக்கமாகவாழும் இடங்களில் விழுந்து வெடித்தன என்றும், குடிமக்கள் பலர் உயிரிழந்தனரென்றும் பக்தாத்அறிவித்தது இதற்குப் பதிலாக ஈராக் கடந்த திங்கள் இரவு ஐந்து ஏவுகணைகளைத் தெஹ்ரான் மீது ஏவியது.

தெஹ்ரானில் உள்ள அரசுக் தலைமையலுவலகங்களை இலக்காக வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பக்தாத் கூறியது

ஆனால் இத்தாக்குதலில் ஆஸ்பத்திரி ஒன்று சேதம் அடைந்தது. பல நோயாளர்கள் காயம் அடைந்தனர்.

பக்தாத் ஏவிய ஏவுகணைகள் 400 மைல் தூரத்துக்குப் பாய்ந்து செல்லக்கூடியவை. (எ)

வெளி உலகில்

சோவியத் யூனியன் நாஸ்திக நாடு அல்ல

வியன்னா, மார்ச்1

சோவியத் யூனியன் நாஸ்திக நாடு அல்ல; சமய சுதந்திரங்களை மதிக்கும் நாடு.

இப்படி சோவியத் பிரதிநிதி யூரி கராஷ்லெவ் சொன்னார்

சமய சுதந்திரம் பற்றி ஐரோப்பிய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் சோவியத் பிரதிநிதி இத்தகவலை வெளியிட்டார்.

ஒழுங்கப்பட்ட சமய சுதந்திரங்களை சோவியத் அரசு பறிகின்றதாக மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

சோவியத் தலைவர் மிகையில் கோர்பச்சேவ் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய பின்னர் தேவாலயங்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நலன் கருதி சமயம் சம்பந்தமான சட்டங்களை எமது அரசு மாற்றி அமைக்கக்கூடும்—

இப்படி சோவியத் பிரதிநிதி மாநாட்டில் சொன்னார்.

1975 ஹெல்சிங்கி உடன்பாட்டுக்கு இணங்க சமய சுதந்திரங்கள் சம்பந்தமாக முன்னேற்றங் காணப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (எ)

இந்தியாவின்

பாதுகாப்புச் செலவினம் ஆயிரம் கோடியாகி அதிகரிப்பு

நிதி அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 1

இந்தியாவின் பாதுகாப்புச் செலவினம் இந்தியப் பணத்தில் ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது

நேற்று லோக்சபையில் நிதி அமைச்சர் நாராயணர் தத்திவாரி சமர்ப்பித்த 1988-89 வரவு செலவுத் திட்டத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

இந்திய பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி இந்தியப் பணத்தில் 13 ஆயிரம் கோடி ரூபா என்று நிதிஅமைச்சர் அறிவித்தார்.

புதிய வரவு செலவுத் திட்டத்தில் 8ஆயிரத்து 120 கோடி ரூபா துண்டு விழுவதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

வன்செயல் அதிகரிப்பு

டெல் அவிவ், மார்ச் 1

இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையோர அரபுப் பிரதேசத்தில் பலஸ்தீனியர்கள் மீதான வன்செயல்கள் அதிகரித்துள்ளன.

பத்து அரபுவாசிகளை இஸ்ரவேலிய படையினர் உயிரோடு எரித்துக் கொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது (எ)

அங்கோலா:

50 தென் ஆபிரிக்க வீரர் 2 மாதங்களில் கொலை!

கேப்டவுன், மார்ச்1

அங்கோலாவில் தென் ஆபிரிக்கா இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் எதிரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனை தென் ஆபிரிக்கப் பாதுகாப்பு அமைச்சு ஊர்ஜிதம் செய்தது.

அங்கோலா அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தும் யுனிடா அமைப்புடன் சேர்ந்து தென் ஆபிரிக்க இராணுவமும் சண்டை இடுகின்றது

அங்கோலாவுக்கு கியூபாத் துருப்புக்கள் உதவுகின்றன.

இந்த ஆண்டில் இடம்பெற்ற சண்டைகளில் இதுவரை 50க்கு மேற்பட்ட தென் ஆபிரிக்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டன.

இதனிடையில் தென் ஆபிரிக்க அரசுப் படை விமானங்கள் அங்கோலா எல்லைப் புறத்தைக் குண்டுகள் வீசித் தாக்கின என்றும் அறிவிக்கப்படுகின்றது. (எ)

பங்களாதேஷில்

தேர்தல் வன்முறை மூவர் பலி; பலர்காயம்

டாக்கா, மார்ச்1

பங்களாதேஷில் வியாழன் நடைபெறும் பொதுத்தேர்தலுக்கு முன்னோடியாக என்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த சனிக்கிழமை பொலீஸார் சுட்டதில் மூவர் உயிரிழந்தனர்; ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

எதிர்க்கட்சிகள் நடத்திய அரசு எதிர்ப்புக் கூட்டங்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

எதிர்க்கட்சித் தொண்டர்கள் உள்ளூர்க் கிறனேட்டுகளைப் பொலீஸார்மீது வீசினர்.

எதிர்க்கட்சித் தலைவர்களான பேகம் லியாவும் ஜபார் ஹுஸினாவும் தனித்தனியாக அரசு எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தினர்.

அக்கூட்டங்களில் மக்களைக் கலந்துகொள்ளாமல் தடுப்பதில் பொலீஸார் ஈடுபட்டனர் அப்போதே இந்த மோதல் ஏற்பட்டது.

மோதலில் 4 பொலீஸாரும் காயமடைந்தனர். (எ)

மத்திய கிழக்குப் பிரச்சினை

அம்மான், மார்ச் 1

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் மத்திய கிழக்குப் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்பினார்.

இறுதியாக ஜோர்தானில் மன்னர் ஹுசேனுடன் திரு. ஷுல்ட்ஸ் பேச்சுக்களை நடத்தினார்.

இதனிடையில் ஜோர்தான் மன்னர் லண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றார். (எ)

செனகல் நாட்டில்

அவசர காலநிலை

செனகல், மார்ச் 1

செனகல் நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

பொதுத் தேர்தலில் மோசடி செய்யப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இதைத் தொடர்ந்து செனகல் தலைநகரில் கலவரங்கள் ஏற்பட்டன.

தற்போதைய ஜனாதிபதி சலிமையிலான அரசுக்கே பொதுத் சேர்தலில் அதிக வாக்குகள் கிடைத்தன என்று செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்தே கலவரங்கள் ஆரம்பமாகின

எதிர்க்கட்சித் தலைவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் (எ)

ஜெயலலிதா ஒரு நாட்டியக் குதிரைதான்; ஆனால் எட்டி உதைத்தால் உங்கள்கதி என்ன ஆகும்?

மணப்பாறை, மார்ச் 1

"ஜெயலலிதா நாட்டியக்குதிரை என்கிறார்கள். ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் அது எட்டி உதைத்தால் உங்கள் கதி என்ன ஆகும்?

ஆர். எம். வீரப்பன் கோஷ்டிக்கு முன்னாள் அமைச்சர் சவுந்திரராஜன் எச்சரிக்கைவிடுத்தார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் அ. தி. மு. கவின் ஜெயலலிதா அணி செயல் வீரர்கள் கூட்டம் நடந்தது.

அதில் சவுந்திரராசன் பேசுகையில் கூறியதாவது:-

யார் யாரோ நம்மை ஒழிக்கச் சதித் திட்டம் போட்டனர். அவற்றையெல்லாம் முறியடித்து தவிடு பொடியாக்குவதே நமது முதல்வேலை.

தமிழகத்தில் திடீர் திடீரென கட்சிகள் உதயமாவது சர்வ சாதாரணம் ஜெயலலிதா புதுக் கட்சி துவக்கி உள்ளார் என்று யாராவது நினைத்தால் அது பைத்தியக்காரத்தனம். அ. தி. மு. க. என்றால் அது ஜெயலலிதா என்றுதான் அர்த்தம்.

ஆண் சிங்கத்துக்குக் கோபம் வரும். பெண் சிங்கத்துக்குக் கோபம் வருவது கடினம். அப்படிக் கோபம் வந்தால் விட்டுவைக்காது நாம் பசுமாடுபோல் சாந்தமாக செயல்படுகிறோம். வம்புக்குப் போகமாட்டோம்.

தூங்கும் சிங்கம்

ஜெயலலிதா தூங்கிக் கொண்டிருந்த சிங்கம். அதைக் சண்டைக்குப்பிள்ளை (ஆர். எம். வீரப்பன்) சீண்டி விட்டுவிட்டார். சிங்கம் சும்மா இருக்குமா? அது கடித்துக் குதறாமல் விடாது.

புரட்சித் தலைவர் என்பது பெரிய குளம். அந்தக் குளத்தில் பெரிய பெரியமீன்கள் இருந்தன. அந்த மீன்களைப் பிடிப்பதற்காக நினைத்து வீரப்பன்கோஷ்டி வலையை வீசினர். மீனுக்குப் பதிலாக நத்தைகள் தான் கிடைத்தது மீன் எல்லாம் ஜெயலலிதா பிடித்துவிட்டார்

கருணாநிதியிடம் இருந்த குளத்தில் எம். ஜி. ஆர் அன்புஎன்றவலையை வீசி மீன்களை பிடித்தார். அதேபோல் இன்று ஜெயலலிதாவுக்கு தொண்டர்கள் பலம் அதிகமாக உள்ளது.

எம். ஜி. ஆர். மன்றம் [illegible] ஜானகி அம்மாள் [illegible] மாநாட்டுக்கு [illegible] அழைப்பினர் [illegible] ஆர். [illegible]வியை

தமிழகத்திலிருந்து

வீரப்பன் கோஷ்டிக்கு சவுந்தரராஜன் எச்சரிக்கை

— சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன்—

இருந்தேன்.

மாநாடு அன்று மேடையில் யார் யாரை உட்கார வைப்பது என்பது குறித்து புரட்சித் தலைவரை கேட்கச் சென்றேன். அவர் என்னை மறுநாள் வரச் சொன்னார் அடுத்த நாள் சென்றேன்.

ஐந்து நாற்காலிகள் மட்டும் மேடையில் பாடச் சொன்னார். ஐந்து பேர்களைக் கூறினார். அதில் ஜானகி பெயர் இல்லை ஜெயலலிதா நெடுஞ்செழியன் பெயர்கள் இருந்தன.

எம். ஜி. ஆர்.

சொத்து யாருக்கு?

"ஜானகி அம்மாள் பெயர் விட்டுப்போய் விட்டதே எம். ஜி. ஆர். அவசரத்தில் கூறிவிட்டாரா" என நினைத்து மீண்டும் எம் ஜி. ஆரிடம் கேட்டேன்.

இது கட்சி மேடை. ஜானகி விட்டுக்குத்தான் ராணி ஜெயலலிதா கட்சிக்கு ராணி. என்று [illegible] சொல்லி [illegible] ஆர். [illegible]

நாட்டியக் குதிரை உதைத்தால்

நமது தலைவி ஜெயலலிதாவை பார்த்து நட்டியக் குதிரை என்கிறார்கள். எது நாட்டியக் குதிரை? எது மண் குதிரை? என்று எங்களுக்குத் தான் தெரியும்.

நாட்டியக் குதிரையை நம்பிப் போகலாம். எப்படியோ நடனமாடிக் கொண்டே போக வேண்டியதுதான் கிற்குப்போய்ச் சேர்ந்து விடும்

ஆனால் மண் குதிரையை நம்பிப் போக முடியுமா? நாட்டியக் குதிரை ஆனால் நீங்கள் பக்கத்தில் போக முடியுமா? எட்டி எட்டி உதைக்கும் உதை எப்படி இருக்கும் என்று உங்களுக்கே தெரியும். இப்படி அவர் கூறினார். (இ-உ)

கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்ப்பாண கல்லூரி கொழும்பு நிறுவனத்தின் இயந்திரவியல் பிரிவு முதலாம் வருட மாணவன் கப்பிரமணியம் மாசிலாமணி கொல்லப்பட்டதைக் சண்டித்து யாழ்ப்பாணக் கல்லூரி தெழிற்நுட்ப நிறுவனப் பொறியியல் பிரிவு மாணவர் மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (இ)

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு

ரூ.20 லட்சம் செலவில் கோயில் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம், மார்ச்.2

செங்கட்டு ஸ்ரீராம கிருஷ்ண மிஷனில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸருக்கு 20 லட்சம் ரூபா செலவில் புதிய கோவில் பிரதிஷ்டை நடைபெற்றது

ஸ்ரீராமகிருஷ்ண மடத்து தலைவர் ஸ்ரீமத் சுவாமி கம்பிரானந்தர் தலைமையில் இப்பிரதிஷ்டை விழா நிறைவேறியது.

இந்தியாவிலுள்ள பல ஸ்ரீராமகிருஷ்ண மடத்து சந்நியாசிகள் சுமார் 125 பேருக்கு மேல் பங்கு பற்றினர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்கள் 6000 பேர் கலந்து கொண்டார்கள்.

கொழும்பு மடத்து அடியார்களும் பாரதிக் துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமியும் கலந்து கொண்டார்கள்.

கோவிலில் தமிழ் நாட்டைச் சித்தரிக்கும் ஒரு கோபுரமும் ஸ்ரீராம கிருஷ்ண மடத்து முறைப்படி ஒரு பெரிய கோபுரமும், நடுவில் அழகான தாமரை வடிவமான கோபுரமும். தசாவதாரத்தைச் சித்தரிக்கும் படங்களும் ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகானந்தர் சந்திப்பை விளக்க, சுவரில் படங்களும் செதுக்கப்பட்டுள்ளன

சாஸ்திர முறைப்படி பல குருக்கள் யாசக ஹோமம் அமைத்து பூஜை வழிபாடு செய்து குடமுழுக்கு மகிமம் நடைபெற்றது. (ஒ)

மேலும் கட்சிகளை அங்கீகரிக்க ஆராய்வு

மாகாணசபைத் தேர்தலில் மேலும் பல அரசியல் கட்சிகள் போட்டியிட வசதி செய்யும் விதத்தில் தேர்தல் சட்டத்தைத் திருத்துவது பற்றி அரசு ஆராயக் கூடும் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழ்ப்பகுதிகளில் உள்ள அமைப்புக்களில் ஈ. பி. ஆர். எ. எல். என்ற அமைப்பு மட்டுமே அரசியல்கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர்

குறள்:

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம் ஒருவந்தம் கைத்துடை யார்.

பொருள்:

ஊக்கத்தை உறுதியாகத் தம் கைப் பொருளாக உடையவர் ஆக்கம் (இழந்து விட்ட காலத்திலும்) இழந்து விட்டோம் என்று கலங்கமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகடிவ் (Processing செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK – FUJI – KONICA – TUDOR-FORTE
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உதயன்

02 - 03 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
NEW KONICA SR-V 100
நிழற்படச் சுருள்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குருநகர் அரசினர் வைத்தியசாலையில்

வாந்திபேதி வார்ட் நிறுவும் முயற்சி கைவிடப்பட்டது

குருநகர், மார்ச் 2
குருநகரில் உள்ள அரசினர் வைத்தியசாலையை வாந்தி பேதி (கொலரா) வார்ட்டாக மாற்றுவதற்கு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்களின் பலமான எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

நேற்றுக் காலை குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த அரசினர் வைத்தியசாலை முன்பாகக் கூடிய பொதுமக்கள் வைத்திய அதிகாரி, தாதிகள், சிப்பந்திகள் எவரையும் உள்ளே நுழைய விடாமல் தடுத்து நிறுத்தினர்.

வைத்தியசாலை நுழைவாசல் பொதுமக்களால் கொண்டுவரப்பட்ட சங்கிலி, பூட்டின் உதவியால் இழுத்து மூடப்பட்டது.

வழியின் குறுக்கே இரண்டு வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

டெண்களும், ஆண்களும் வாசலை மறித்து இருந்தும் நின்றும் காணப்பட்டனர்.

லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட மருந்துப் பொருள்களை உள்ளே எடுத்துச்செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபையின் உறுதிமொழியை அடுத்து பொதுமக்கள் 11-மணிக்குப் பிற்பாடு வைத்திய சாலையை இயங்க அனுமதித்தனர்.

(இ-51)

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)
ஏலவிற்பனை

எமது சங்கத்தில் பெயிற், பொலிஷ், சயிக்கிள் ரயர், ரியூப், திராங்கு, பிணைச்சல் போன்ற இருப்புப் பொருட்களும், லொறி ரயர், மழைவுமாட், சீனி போன்ற இன்னும் பல பொருட்களும் 1988 03 05 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு களஞ்சியத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக்கூற்றை வெற்றி பெறுவோர் ஏலத்தில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்றுத் தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்

பொதுமுகாமையாளர்

1988 03 . 01

அண்ணா தொழிலகம்
இணுவில்

வாடிக்கையாளர்களே!
உங்களுக்கு ஓர் நற்செய்தி
● அரிசி மா
● வறுத்த அரிசிமா
● வறுத்த உழுத்தம்மா

பக்கட்டுகளாகவும் சாக்குகளிலும் (சொரியாகவும்) தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரேயொரு இடம்.

அண்ணா
கோப்பிக்கடை,
யாழ்ப்பாணம்.

குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில்
கம்பியூட்டர் கல்வி
Computer Programming In Basic
பயிற்சிக்காலம்: 40 நாள்
ஆரம்பம்: 7 - 03 - 88
கட்டணம் 750/- மாத்திரம்
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
சான்றிதழ் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு நாள்: 6-3-88
Unicko Computer Centre
NO. 5 மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்
(உபதபாற்கந்தோர் அருகாமையில்)

SARAA SETHU SERVICES
சரு சேது சேவிசஸ்
UNDERTAKE
CIVIL CONSTRUCTION, SUPPLIERS OF BUILDING MATERIALS
Regd. No 15807
207, K. K. S. ROAD, CHUNNAKAM.

ரிவோல்வர் விற்கச் சைக்கிளில் சென்றவர்!

கொழும்பு, மார்ச் 2
ரவைகள் நிரப்பப்பட்ட ரிவோல்வருடன் சைக்கிளில் சென்று கொண்டு இருக்த ஒருவரை ஹோமகம பொலீஸார் கைது செய்தனர்.

கட்டுக்குருந்த என்னுமிடத்தில் லவத்தே இவர் கைதானார்,

''ரிவோல்வர் வேறு ஒருவருடையது. விற்பதற்காகக் கொண்டு செல்கின்றேன்'' — இப்படிச் சந்தேக நபர் பொலீஸாரிடம் சொன்னாராம்.

விசாரணையின் போது சம்பந்தப்பட்ட ரிவோல்வர் கடற்படையைவிட்டு வெளியேறிய ஒருவருடையது என்பது தெரிய வந்தது.

இதன் பின்னர், தகவல்களின் பேரில் பொலீஸார் நான்கு பேரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

''விற்பதற்காக எவரும் ரவைகள் போடப்பட்ட நிலையில் ரிவோல்வரைக் கொண்டு செல்லமாட்டார்கள். யாரையும் கொலை செய்யத்தான் கொண்டு போவார்கள் — இப்படி ஹோமகம நீதிவான் கூறி சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(அ எ)

நகரில் நேற்று கடும் சோதனை

குருநகர், மார்ச் 2
யாழ். நகரப் பகுதியில் பிரதான சந்திகளில் இந்திய அமைதிப் படையினர் நேற்றும் வீதி மறிப்புச் சோதனைகளை மேற்கொண்டனர்.

அடையாள அட்டைகள், கொண்டு செல்லும் பொருள்கள் என்பன சோதனை செய்யப்பட்டன.

மாலை ஏழு மணிவரை இவ்வாறான சோதனைகள் நடந்தன. (ஒ 51)

தியாக நோன்பை தற்காலிகமாகவே ஒத்திவைத்துள்ளோம்

முன்னணியின் போஷகர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 2
சாகும்வரையான இந்த தியாக நோன்பு தற்காலிகமாகவே ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது

அன்னையர் முன்னணியினருடன் இந்திய அரசும், விடுதலை புலிகளும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு தடங்கல் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்திலேயே இந்த சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஒத்தி வைத்தோம்.

இவ்வாறு மட்டக்களப்பு அம்பாறை அன்னையர் முன்னணியின் போஷகர் திரு விங்ஸ்லி ராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

இதனிடையில், மட்டக்களப்பு அன்னையரின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கடந்த திங்கட்கிழமை திரு லை அன்னையர் முன்னணியினரும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

திருமலை பத்திரகாளியம்மன் ஆலய முன்றலில் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(ஒ)

ஜே.வி.பி. வன்செயலை கைவிட்டால்------

கொழும்பு, மார்ச் 2
வன்செயல்களைக் கைவிட்டு ஜனநாயக முறைக்கு ஜே.வி.பியினர் வந்தால், அவர்களின் முதல் பொதுக்கூட்டத்தை நடத்த நான் இடம் வழங்குவேன்.

இப்படிச் சொன்னார், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி. கல்கிஸையில் உதவி அரச அதிபர் அலுவலகத்தை அமைச்சர் திறந்து வைத்துப் பேசினார்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது;

விஜய குமாரணதுங்கா பிரபலமிகுந்திருந்த சமயத்தில் அவரின் முதலாவது கூட்டத்தை நடத்த நான்தான் இடம் ஏற்பாடு செய்து கொடுத்தேன்.

அப்படியிருந்தும் விஜேயை என்னைப் பலமாகக் கண்டித்து வந்தார். அவரின் கட்சியும் என்னைக் கண்டித்தது.

நான் அவற்றை ஏற்றுக்கொண்டேன். இதுதான் ஜனநாயகம்.

ஜே வி பிக்கும் அதன் முதலாவது கூட்டத்தை நடத்த நான் இடம் ஏற்பாடு செய்யத் தயாராக உள்ளேன்.

பல இனமக்கள் வாழ்ந்திடினும் நாம் இலங்கையர் என்ற உணர்வை வளர்க்க வேண்டும் —

இப்படி அமைச்சர் மேலும் சொன்னார்.

(இ-எ)

யானை தாக்கி இருவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
யானை தாக்கி இரண்டு பேர்மரணமடைந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். குடிசைகள் பல சேதமடைந்தன.

நாவற்பண்ணைஊட்டுப்புரம் என்ற இடத்தில் திங்கட்கிழமை அதிகாலை மூன்று மணி அளவில்இச் சம்பவம் நடைபெற்றது

சம்பவதினம் இவ்வூர் மக்கள் நித்திரையில் இருந்த வேளை காட்டு யானை ஒன்று ஊர்மனைக்குள்புகுந்துவிடொன்றில் படுத்திருந்த ஆறுவயது குழந்தை 60வயதுடைய பெண் ஆகிய இருவரையும் அடித்துக் கொன்றது.

எஸ் மாடத்தி (வயது 60). முத்தையா விஜயகுமார் (வயது 6) ஆகிய இருவருமே மரணமானவர் ஆவர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த மு மாரியாயி (வயது 39) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார். (ஒ-10)

மக்கள் வங்கி. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்தப்பட்டார்.

அவரின் தலை, கழுத்து, கைகளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

மக்கள் வங்கித் தலைவர் சென்று கொண்டு இருந்த காரின் அருகில் லொறி ஒன்று வந்து நின்றது.

லொறியில் இருந்து இறங்கி சிலர் மக்கள் வங்கித் தலைவர் மீது தானியங்கித் துப்பாக்கியால் சுட்டனர்.

காரின் சாரதி, காரை விரைந்து செலுத்தியதால் மேலதிக சமான தாக்குதலைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

கொழும்பு பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவரின் உடல்நிலை ஆபத்தாக இல்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

யாழ்மட்டுநகர் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக சேவை நிறுத்தப் பட்டது

ஆசனங்களை பதிவு செய்வோர் உடன் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது (ஒ-10)

இரவில் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முறைகளைக் கையாள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்குமுறைகள் இந்திய அமைதி காக்கும் படையினரின் சாவடிகளில் வைக்கப்பட்டுள்ளன.

மீனவர் சங்கங்கள் இது தொடர்பாக மீனவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும்படி கோரப்பட்டுள்ளன. (இ-51)

கொழும்பு-யாழ்-கொழும்பு
விமான சேவை
ஆரம்பம்: 12th March 1988
வாரம் 2 நாட்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
V. M. S.
Travels & Tours (Pvt) Ltd
M 4, Hotel Galadri Meridien
64, Lotus Road, Colombo – 1
T. Phone 544544, 26157
Hotel Gnanams
299, Clock tower Road, Jaffna.
மற்றும் பாஸ்போட், விசா, ரிக்கட் எம்மால் துரித கதியில் செய்து கொடுக்கப்படும்.
(1606)

திருமலையில் ஸ்தம்பிதம்

கொழும்பு, மார்ச் 2
திருமலை நகர சிவில் நிர்வாகம் தொடர்ந்து ஸ்தம்பித்த நிலையில் இருந்து வருகின்றது. எனினும் பாடசாலைகள், வைத்தியசாலைகள் இயங்குகின்றன,

வங்கிகள் செயற்படவில்லை திருமலை நகராட்சி மன்ற தபால் நிலையங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் எல்லாம் மூடப்பட்டுள்ளன.

ROYAL INSTITUTE
MANIPAY (மகளிர் கல்லூரி அருகு)
A/L 1988 - 89
கணக்கியல்
Mr. ஸ்ரீ காந்தன்
ஆரம்பம் 2 - 3 - 88 5. 00 P. m.
88 மீட்டல் வகுப்புக்கள்
89 விசேட வகுப்புகள்
— நிர்வாக இயக்குனர்
(1783)

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)
அறிவித்தல்

எம்மிடம் சுமார் 5,000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன.

வெற்றுச் சாக்குளுக்கு மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா. 250 / ஐ சங்கத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைச் சங்க வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

1988 . 03 . 05 சனிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்,
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்.
1988 . 03 . 01

90 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி. மேரி செஸ்ரியம்பிள்ளை

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த, எங்கள் இல்லற ஜோதியே! தாழ்ச்சியின் உறைவிடமே! மின்னல் என உம் ஒளி அணைந்து. இருளில் மூழ்கி விட்டோம். நீவிர் எமக்காய் இறைவனை வேண்டுகின்றீர் என நம்பி வாழ்கின்றோம் தாயே! உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம் தாயே!

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

61/1 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (1607)

நிக்கார் பட்டியல்

திரு. சின்னையா ஜெயக்குமார்

(கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், புன்னாலைக்கட்டுவன்)

திரு சின்னையா ஜெயக்குமார் 29-02-88 இல் காலமானார். அன்னார் வசாவிளான் காலஞ்சென்ற திரு சின்னையா (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்), திருமதி பராசக்தி சின்னையாவின் சிரேஷ்ட புதல்வனும், ரஜனி பாலச்சந்திரன், தேவகுமார் (மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை) நந்தினி திருஞானசம்பந்தர், பாமினி வதனகுமார் (பேராதனை பல்கலைக்கழக யொறியியல் பீட மாணவர்), சாந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (பொதுச் செருக்கள் அதிகாரசபை, மன்னார்), திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனரும், பாலமதி, பாலசெந்தூரன், பாலேசன், திருமாறன், கௌசிகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வ நடராசாவின் (மாநகர சபை, யாழ்ப்பாணம்) அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-03-1988 புதன்கிழமை பி. ப. 2 மணியளவில் அச்சுவேலி குடும்ப மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி, தகவல்: தேவகுமார்
(1786)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02-03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road Jaffna on Wednesday, 2nd March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org